அடையாள இலக்கம்:

அகில அவுஸ்திரேலியா, நியூசிலாந்து
தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் - 2010

அவுஸ்திரேலியா பட்டதாரிகள் தமிழர் சங்கம்
Tamil Competition – Australian Society of Graduate Tamils

# விசேட எழுத்தறிவுப் போட்டி

**விசேட இளைஞர் பிரிவு**
(15-17 வயதுப் பிரிவு)

காலம்: மு.ப. 9.30 மணி, ஞாயிற்றுக்கிழமை

நேரம் : 2.00 மணி

பரீட்சைத் தாளை வாசிக்க மேலதிக 10 நிமிடங்கள் வழங்கப்படும்.

## அ) கீழே தரப்பட்ட சொற்களின் எதிர்ச் சொற்களை எழுதுக.

புள்ளிகள்: 5 x 1 = 5

1. ஞானம் ................................
2. ஆரோகணம் ................................
3. நம்பிக்கை ................................
4. சுரர் ................................
5. புதுமை ................................

| புள்ளிகள் | |
|---|---|

## ஆ) கீழே தரப்பட்ட சொற்களைப் பிரித்து எழுதுக.

புள்ளிகள்: 5 x 1 = 5

1. அக்கோயில் = ............+ ..................
2. தீச்சுடர் = ............+ ..................
3. பலகைகள் = ............+ ..................
4. இவ்வரசன் = ............+ ..................
5. மரவடி = ............+ ..................

| புள்ளிகள் | |
|---|---|

## இ) பின்வரும் கேள்விகளுக்குச் சரியான விடைகளைத் தெரிந்தெடுத்து அதற்குரிய இலக்கத்தை விடப்பட்ட இடத்தில் எழுதவும்.

புள்ளிகள்: 15 x 1 = 15

1)ஒரே சமயத்தில் பத்து விடயங்களை அறியும் ஆற்றல் உள்ளவன்.

1. அட்டாவதானி 2. தசாவதானி ( )
3. சோடசாவதானி 4. சதாவதானி

2) ஒரு நூலுக்கு நூலாசிரியர் அல்லாத ஒருவர் நூலைப்பற்றி வழங்கும் முகவுரை.

1. அணிந்துரை 2. பதிப்புரை ( )
3. பொழிப்புரை 4. பதிலுரை

3) தேர், யானை, குதிரை இவற்றுடன் காலால் நடக்கும் ஆட்படை

1. போர்ப்படை 2. நாற்படை ( )
3. வாட்படை 4. கவசப்படை

4) எழுபத்தைந்தாவது ஆண்டு முடிவில் எடுக்கப்படும் விழா,

1. வெள்ளிவிழா 2. திருவிழா ( )
3. வைரவிழா 4. பொன்விழா

5) நிலம், நீர், தீ, வளி(காற்று), வான்(ஆகாயம்)

1. ஐம்பொறி 2. ஐம்புலம் ( )
3. ஐம்படை 4. ஐம்பூதம்

6) கண்டம் என்ற சொல்லின் எதிர்மறைப் பொருள்

1. சிகண்டம் 2. சகதண்டம் ( )
3. அகண்டம் 4. பிண்டம்

7) தபுதாரன் என்ற சொல்லிற்கு ஒத்த கருத்தைத் தரும் சொற்பதத்தைத் தெரிக
1. மனைவியை நேசிப்பவன் 2. மனைவிக்குத் துரோகம் செய்பவன்
3. மனைவியை இழந்தவன் 4. மனைவியை இம்சிப்பவன் ( )

8) வன்னியை ஆண்ட தமிழ் மன்னர்களில் ஒருவன்
1. பண்டார வன்னியன் 2. காக்கை வன்னியன் ( )
3. சங்கிலியன் 4. இராஜ சிங்கன்

9) பல்லவ மன்னர்களின் கொடியில் இருந்தது
1. புலி 2. நந்தி ( )
3. யானை 4. வராகம்(பன்றி)

10) யாழ்ப்பாண அரசின் கடைசித் தலை நகரம்
1. கந்தரோடை 2. கோப்பாய் ( )
2. வல்லிபுரம் 4. நல்லூர்

11) யாழ்ப்பாண அரசை அடிமைப்படுத்திய சிங்கள மன்னன்
1. முதலாம் பராக்கிரம பாகு 2. முதலாம் விஜய பாகு ( )
2. ஆறாம் பராக்கிரம பாகு 4. இராஜ சிங்கன்

12) பாண்டிய மன்னர்களின் கொடி
1. புலி கொடி 2. நந்திக் கொடி ( )
2. மீன் கொடி 4. வீணைக் கொடி

13) தமிழ் மொழிக்குச் சேவை செய்த ஐரோப்பிய பெரியார்
1. மறைமலை அடிகள் 2. வீரமாமுனிவர் ( )
3. இளங்கோ அடிகள் 4. விபுலானந்த அடிகள்

14) தமிழ் மொழியைச் செம்மொழியாக்கப் பாடுபட்ட அமெரிக்கப் பேராசிரியர்?
1. பேராசிரியர் சுமாயா 2. பேராசிரியர் ஹரிஸ் ( )
3. பேராசிரியர் கிமர் 4. பேராசிரியர் பெனாண்டோ

15) கற்பிற்கு இலக்கணம் சீதை போல, நட்பிற்கு இலக்கணம்?
1. கும்பகர்ணன் 2. கர்ணன் ( )
3. திரௌபதி 4. பீஷ்மர்

| புள்ளிகள் | |
|---|---|

**ஈ) கீழே தரப்பட்ட சோடி வாக்கியங்களை இணைப்பதற்கு இங்கு தரப்பட்ட நான்கு சொற்களில் இருந்து ஒரு பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்து வாக்கியங்களை இணைத்துக் கோட்டின் மேல் எழுதுக.** புள்ளிகள்: 5 x 2 = 10

1) அவுஸ்திரேலியாவில் பல்வேறு நாடுகளிலும் இருந்து மக்கள் வந்து குடியேறுகின்றனர். ..........................................................
பல இன மக்களை இங்கு காணக்கூடியதாக உள்ளது.
1. குடியேறுவதால் 2. குடியேறவிருப்பதால்
2. குடிபெயர்ந்ததால் 4. குடியேறாதிருப்பதால்

2) அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம். ......................................
ஔவையார் கூறியது எவ்வளவு உண்மை.

1. ஆனால் 2. பற்றி
2. என்று 4. என்றாலும்

3) அடை மழையின்போது மின்னல் மின்னியது. ......................................
இடி இடித்தது.

1. மின்னியதென்றாலும் 2. மின்னியபோதும்
2. மின்னியதைத்தொடர்ந்து 4. மின்னாவிட்டாலும்

4) ஆசிரியர் என்னை மிகவும் புகழ்ந்தார். ......................................
அவர் செய்கையின் காரணம் எனக்கு இப்பொழுது புரிகிறது.

1. பேசியதன் 2. புகழ்ந்ததன்
2. புகழ்ந்தபோது 4. புகழ்ந்ததால்

5) கண்ணன் போட்டிகளில் பலமுறை தோற்றான். ......................................
கண்ணன் விடாமுயற்சியினால் இறுதியில் வெற்றி அடைந்தான்.

1. என்றாலும் 2. தோற்றிருந்தும்
2. தோற்றதோடு 4. சலிப்படையாது

| புள்ளிகள் | |
|---|---|

**உ) கீழே தரப்பட்ட சொற்களை ஒழுங்குபடுத்திச் சரியான வசனங்களை அமைக்குக.** புள்ளிகள்: **5 x 3 = 15**

1. செவ்வி காணலில் \ இன்று \ வகிக்கின்றன
\ இடத்தைப் \ முக்கிய \ பொதுசன \ தொடர்பு சாதனங்கள்

..................................................................................................
..........................................................................................2.
நாளை\ என்று\ இன்று\ வா \இராமன் \போய்
கூறினான் \இராவணனுக்குக்

..................................................................................................
..........................................................................................3. கம்பர்
\ வாழ்ந்தவர் \ஆராய்ச்சியாளர்கள் \ என \
பன்னிரண்டாம் \ கூறுகின்றார்கள் \ நூற்றாண்டில்

..................................................................................................
..........................................................................................4.தொட்டி
லிற் \ குழந்தைகளுக்கு \ கற்பித்தல் \ நல்ல\ இளமையிலேயே \ பழக்கம் \ வரையும்\
என்ற\ சுடுகாடு\ நாம்\ பழமொழிக்கமைய\ நல்லது\ பழக்கங்களை

..................................................................................................
..................................................................................................
..................................................................................5. அவனோடு
\ என்று \ தாங்கள் \ கூறினான் \ இராமன் \ சகோதரர்கள் \ குகனுக்குக் \
ஆனார்கள் \ ஐந்து

..................................................................................................
..........................................................................................

| புள்ளிகள் | |
|---|---|

அகில அவுஸ்திரேலியா, நியூசிலாந்து
தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் - 2010

அவுஸ்திரேலியா பட்டதாரிகள் தமிழர் சங்கம்
Tamil Competition – Australian Society of Graduate Tamils

# எழுத்தறிவுப் போட்டி – பகுதி 2

<u>இளைஞர் பிரிவு</u>
(15-17 வயதுப் பிரிவு)
காலம்: மு.ப. 9.30 மணி, ஞாயிற்றுக்கிழமை

**ஊ) கீழே உள்ள கட்டுரையை நன்றாக வாசித்தபின் தரப்பட்ட கேள்விகளுக்களுக்குத் தகுந்த விடைகளை எழுதுக.**

*புள்ளிகள் : 20*

**பேச்சாற்றல்**

சொற்பொழிவு என்னும் பெயரால் நடைபெறுகின்ற எல்லா மேடை நிகழ்ச்சிகளும் பொதுமக்களைக் கவர்ந்து ஈர்ப்பதில்லை. பலரின் சொற்பொழிவுகள் சில சமயங்களில் எமக்குச் சுமையாகவும், பாரமாகவும் தோன்றுகின்றன. சுவையாகவும் சுவாரசிகமாகவும் இருக்காத எதுவும் சுமையாகத்தான் இருக்கும். சுமையை எவரும் விரும்பி ஏற்றுக்கொள்ளவதில்லை. மனிதர்கள் வெறும் சுமைதாங்கிகள் அல்லர். மனிதர்கள் உணர்வுகளையும், உணர்ச்சிகளையும் கொண்டவர்கள். விருப்பும் வெறுப்பும் உள்ளவர்கள். அவற்றிற்கேற்பத் துலங்கும் தன்மையையும் உடையவர்கள்.

மேடையிலே சொற்பொழிவு நிகழ்ந்து கொண்டிருக்கையில் மண்டபத்தில், சிலர் தங்களிடையே பேசிக்கொண்டிருப்பார்கள். இன்னும் சிலர் எழுந்து போவதும் வருவதுமாகக் காணப்படுவர். மேலும் சிலர் உறங்கத் தொடங்கவும் முற்படுவர். இவற்றைவிட இன்னும் விசேடமாகக் கவனிக்கக் கூடியதாக இருப்பது என்னவென்றால், மேடையில் வீற்றிருக்கின்ற ஏனைய பேச்சாளர்கள் தங்களுக்கிடையே குசலம் விசாரித்துக் கொண்டும், சிரித்துக் கதைத்துக் கொண்டும் இருக்கின்ற அலட்சியபாவக் காட்சியேயாகும். சபையோர் அவ்வாறு துலங்குவதற்கும், அவர்களின் அலட்சிய பாவத்திற்கும் காரணம், சொற்பொழிவாளர் சபையோரின் கவனத்தைத் தம்பால் ஈர்க்கத்

தவறியமையும், சபையோரைத் தம்வயப்படுத்தித் தம் ஆளுமை ஆட்சியின் கீழ் கொண்டுவரக்கூடிய திறமையைப் பெற்றுக்கொள்ளாமையும் ஆகும். உண்மை இவ்வாறிருக்க, சபையில் காணப்படும் அமைதியின்மைக்குச் சபையோரினது தரத்தைக் குறைவாக மதிப்பிட்டு, அவர்கள்மேல் குற்றம் சுமத்துவது எவ்விதத்திலும் நியாயமானது அல்ல. சபையோர் சித்திரப் பாவைகள் போல அமைதியுடன் அவ்வப்போது மகிழ்ச்சி ஆரவாரத்தைக் காட்டியும் கைகளைத் தட்டியும் சொற்பொழிவுகளை இரசனையுடன் அனுபவித்துக் கொண்டிருந்த சந்தர்ப்பங்களையும் நாம் கண்டிருக்கிறோம்.

வள்ளுவப் பெருந்தகையும் சொற்பொழிவினை ஆற்றும் போது, கேட்போரைத் தன்வயப்படுத்தும் பண்புகளுடன், கேட்க விருப்பமில்லாதவர்களும் கேட்க விரும்புமாறு கூறப்படுவது சொல் வன்மையாகும் என்று கூறியுள்ளார். சொற்பொழிவு ஒன்றின் வெற்றிக்கு கேட்போரின் பண்பும், ஒத்துழைப்பும் மிக முக்கியமானவை என்பதை மனதில் கொள்ளுதல் அவசியம். அதனால் சொற்பொழிவாளர் அவையை அறிந்து கொள்ளுதல் வேண்டும். அவையோரின் தன்மைக்கும, தரத்திற்கும் ஏற்பப் பேச்சினை நன்கு ஆயத்தம் செய்தல் வேண்டும்.
பேச்சு ஒன்றினை ஆயத்தம் செய்யும்போது நாம் சில முக்கிய அம்சங்களைக் கவனித்தல் அவசியமாகிறது. பேசுவதற்கு எடுத்துக்கொண்ட கருத்தை முகஞ்செய்தலும் ஒரு முக்கிய இடத்தைப் பெறுகின்றது. இதன் விளக்கம் என்னவென்றால், தான் பேச எடுத்துக்கொண்ட பொருளினை இரத்தினச் சுருக்கமாகச் சபையோருக்கு அறிமுகம் செய்தல் என்பதாகும். எல்லோரையும் கவரக்கூடிய பேச்சின் தொடக்கம் பாதிவெற்றி என்பார்கள். உதாரணமாக ஒரு ஓட்டப் பந்தயப் போட்டியில், ஆரம்பத்தில் பிந்தியவரால், இறுதியில் வெற்றிபெற முடியாது. ஆகவே சொற்பொழிவிலும் ஆரம்பம் கவர்ச்சிகரமாகவும், சபையோரின் கவனத்தைத் தம்பால் ஈர்ப்பதாகவும், சபையோருடன் ஒரு நல்ல உறவினை ஏற்படுத்தக் கூடியதாகவும் விளங்க வேண்டும். சபையோரைத் தம்வயப்படுத்த ஏதாவதொரு விகடத் துணுக்கையோ அல்லது சிறு கதை அல்லது சம்பவத்தையோ கூறி ஆரம்பத்திலேயே எல்லோரையும் கவரலாம்.

பேச்சின் முக்கிய அம்சம் என்னவென்றால் பேச எடுத்துக்கொண்ட விடயத்தை ஒரு சிறந்த ஒழுங்கு முறையில் கோர்வைபோலத் தொடுத்து வளர்த்தல் ஆகும். பேச்சின் கருப்பொருளை விவரிப்பதொடு அதன் முக்கியத்துவத்தை நிலைநாட்டுதல்– அதை திருப்திகரமாக முடிப்பது– மாறுபட்ட கருத்துகள் கொள்கைகளை எதிர்பார்ப்புடன் ஊகித்து அவற்றைத் தருக்க ஒழுங்கிலே முறையான விளக்கங்களைக் கொடுத்து சரியானவற்றை நிரூபிப்பது – அழுத்தமாகக் கூற இருப்பவற்றை அழுத்தமாகக் கூறுவது – தேவைப்படும் போது பேசப்படும் கருத்துகளுக்கு மெருகூட்டுவதற்குப் புள்ளி விபரங்கள், தரவுகள் கூறுவது –இடையிடையே பேச்சிற்குச் சுவை ஊட்டுவதற்கு நகைச்சுவை தரும் சிறு துணுக்குகளை அளவாகப் பாவிப்பது – கேட்போர் மனங்களில் பதியும்படி முக்கிய கருத்துகளை மீள வலியுறுத்துவது – எவருடைய மனத்தையும் புண்படுத்தாதவாறு முரண்பட்ட கருத்துகளுக்கு பண்பான முறையில் வாதிடுவது– பேச்சாற்றலில் ஆளுமைபெற ஒருவர் இப்படியான அம்சங்களை நிதானத்துடன் கையாளும் திறனை வளர்க்க வேண்டும். இது போலத் தனக்குக் கொடுக்கப்பட்ட நேரத்திற்குள் தனது பேச்சைப் பேசி முடித்தல் முக்கியமானது. பேச்சின் தலைமைக் கருத்துகளுக்கு முக்கியத்துவம் அளித்து, கேட்போருக்குத் திருப்தியும் நிறைவும் ஏற்படக் கூடிய வகையில் பேச்சை முடிப்பதற்கு நேரத்தை முகாமை செய்யுந் திறனை வளர்ப்பதும் அவசியமாகின்றது. ஒரு பேச்சுக்கு ஆரம்பம் எவ்வளவு முக்கியமோ அதன் முடிவுரையும் முக்கியத்துவம் வாய்ந்தது. பேசியவற்றின் சிறு தொகுப்புடன் அதில்வரும் ஓரிரு முக்கிய கருத்துகளை அழுத்திக் கூறி நன்றி நவில்தலையும் சேர்த்துத் தனது பேச்சினை முடிப்பது நன்றாக இருக்கும்.

1. ஆசிரியரின் கருத்துப்படி பலருடைய மேடைப் பேச்சுகள் ஏன் எல்லோரையும் ஈர்ப்பதில்லை?.

2. மேடையிலே சொற்பொழிவு நிகழ்ந்து கொண்டிருக்கையில் மண்டபத்தில் உள்ள பார்வையாளர்கள் எப்படி எப்படியெல்லாம் தமது உணர்ச்சிகளை வெளிக் காட்டுகிறார்கள் என ஆசிரியர் நம்புகிறார்?

3. மேடைப் பேச்சு எல்லோரையும் கவரவேண்டும் என்றால் ஒருவர் எப்படித் தனது பேச்சை ஆரம்பித்தல் நல்லது?.

4. சிறந்த மேடைப் பேச்சாக அமைவதற்கு ஒருவர் கவனிக்க வேண்டிய அம்சங்கள் எவை என நீங்கள் கருதுகிறீர்கள்?.

5. இந்தச் சொற்களின் பொருள் விளங்கும்படி அவற்றை வைத்து வசனங்கள் அமைக்குக.

அ) சுமைதாங்கி

ஆ) ஆளுமை

இ) ஒத்துழைப்பு

ஈ) கருப்பொருள்

| புள்ளிகள் | |
|---|---|

எ) **கீழே தரப்பட்ட தலைப்புக்களில் ஒன்றைப் பற்றி 250 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக. கொடுக்கப்பட்ட எழுதுதாளை இதற்கு உபயோகிக்கவும்.**

புள்ளிகள் = 30

1. ஈழப்போரின் பின் குழப்பத்தில் இருக்கும் புலம்பெயர்ந்த தமிழ் மக்களின் தலைவராக தெரிவாகும் நீங்கள் புலம்பெயர்ந்த தமிழ் மக்களுக்கு எப்படியானதொரு தலைமைத்துவத்தை வழங்குவீர்கள் என்றும் தடுப்பு முகாம்களில் அல்லல் படும் எமது தமிழர்களுக்கு எவ்வாறு உதவுவீர்கள் என்றும் ஒரு கட்டுரை எழுதுக.

2. தொலைதொடர்பு சாதனங்களின் வளர்ச்சி மனிதனின் கட்டுப்பாட்டை மீறிவிட்டது. தொலைக்காட்சியும் திரைப்படங்களும் இன்றைய சமுதாயத்தை பெரிதளவில் மாற்றும் பெரும் சக்தியுடையவை. சமுதாயத்தில் முதலில் எதைத் திருத்தவேண்டுமோ அதை நாம் தொலைத் தொடர்பு சாதனங்களின் வழி திருத்தவேண்டும். இதை நோக்கில் கொண்டு தமிழ்த் தொலைக்காட்சி நிலையத்தின் புதிய இயக்குநராக பதவியேற்கும் நீங்கள் ஒரு சமூகத்தின் பல்வேறு தேவைகளை நிறைவு செய்யும் வகையில் எவ்வாறு சிறப்புடன் கொண்டு நடத்துவீர்கள்? இதைப்பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

3. உங்கள் வயதிலிருக்கும் நெருங்கிய சிநேகிதன் அல்லது சிநேகிதி குடும்பத்தைவிட்டு தனியாக சென்று சுதந்திர வாழ்க்கை வாழவேண்டும் என எண்ணுகிறார். குடும்ப ஆதரவு அல்லது சுதந்திரவாழ்வு, இவ்விரண்டிலும் நாம் எதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்? உங்கள் சிந்தனைகள் பற்றி உங்கள் நண்பருக்குக் கடிதம் எழுதுக.

| **புள்ளிகள்** | |
|---|---|

| **மொத்தப் புள்ளிகள்** | |
|---|---|